# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 115/2022

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8ம் நாள் புதன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.
ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பழனி | | |
| த/பெ. | வெங்கடேசன் | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | நெடுவரம்பாக்கம் | வயது | 55 |
| தொழில் | கூலி வேலை | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 8வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன். ம.சா.ஆ.2 ஆவணம் நகல் என்பதால் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணை செய்யப்பட்டதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | மருத்துவ விடுப்பு அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 3 | மனுதாரர் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 4 | மனுதாரர் வங்கி கணக்கு புத்தக நகல் |
| ம.சா.ஆ 5 | வாகன பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ 6 | ஓட்டுநர் உரிமம் (பேருந்து ஓட்டுநர்) நகல் |
| ம.சா.ஆ 7 | பேருந்து ஓட்டுநர் கைது அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 8 | பேருந்து தடம் குறிப்பேடு நகல் |

**குறுக்கு விசாரணை**.

எனது வருமானம் தொழிலை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 24.03.2022 இரவு 8.00 மணியளவில் நான் காரநோடை பஜாரிலிருந்து பஞ்செட்டிக்கு நடந்து வந்து போது எனது பின்னால் வந்த பேருந்து என் மீது மோதிவிட்டது. நான் மது அருந்துவிட்டு சாலையை கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த இடம் நெரிசலான இடம் என்றால் சரியல்ல. அங்கு சாலையை கடக்கும் இடம் இல்லை என்றால் நான் சாலையை கடக்கவில்லை. நான் பேருந்து ஓட்டுநருக்கு எதிரான குற்ற அறிக்கையை மோட்டார் வாகன அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு 4 பற்கள் உடைந்துவிட்டது. இன்னும் பற்களை கட்டவில்லை. நான் மது அருந்துவிட்டு சாலையை கடந்ததுதான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி